எம்.சி.ஓ.பி எண்: 1820/2021 தேதி: 25.11.2025

எ,மசா. : 1

பெயர் : ஸ்ரீ ராமசந்திரன்

த/பெ. : பரமசிவம்

வயது : 49

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் ஆவடி போக்குவரத்து புலன் ஆய்வு பிரிவு பூந்தமல்லி சென்னையில் தலைமைக்காவலராக ஆக பணியாற்றி வருகிறேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அதிகார கடிதத்தை தாக்கல் செய்கிறேன், அது எ.மசாஆ 1 ஆகும். வாகன பதிவெண் TN–12–AL–5628 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்கிறேன். அது எமசாஆ 2 ஆகும். வாகன பதிவெண் TN–12–U –6347 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்கிறேன். அது எமசாஆ 3 ஆகும். இந்த குற்றவழக்கு எண் 270/2021 வழக்கில் விபத்தில் இரண்டு இருசக்கர வாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ளது. வாகன பதிவெண் TN–12–AL–5628 வாகனத்தை ஓட்டி வந்தவர் அருன்தேஜா. அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சிஆர் கொடுக்கப்பட்டுள்ளது. வாகன பதிவெண் TN–12–U –6347 வாகனத்தை ஓட்டிச்சென்றவர் பலராமன். அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சிஆர் கொடுக்கப்பட்டுள்ளது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாகன பதிவெண் TN–12–AL–5628 வாகனத்தின் ஓட்டுநர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அவர் பெயரில்தான் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குற்றப்பத்திரிக்கையில் ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்படவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற விவரத்தை நான் கூறமுடியாது என்றாலும் அதை வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்திலிருந்து வந்தவர்தான் கூறமுடியும் என்றாலும் அது பற்றி தெரியாது.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.